1972 மார்ச் 7]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதுதான் மூலக் கேள்வி. அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்து வருவதாகக் குறிப்பிட்டேன்.

திரு. வி. கே இராஜாப்பிள்ளை : ஊராட்சி ஒன்றியங்களில் தற்காலிகமாக வேலை செய்துவரும் தையல் ஆசிரியைகள் போன்றவர்களை நிரந்தரமாக்கும் திட்டம் ஏதாவது அரசின் பரிசீலனையில் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றி தனிக் கேள்வி போட வேண்டும். சில பேர்களை பார்ட் டைமாக வைத்துக்கொள்ளும்போது அவர்களைப் பகுதிநேர ஊழியர்களாகத் தான் வைத்துக்கொள்ள முடியும். முழு நேரமாக்குவதற்குத் தனி முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். தனிக் கேள்வி போட்டால் விவரங்கள் தரப்படும்.

அம்மாப்பேட்டையிலுள்ள அரசு மருந்தகம்

* 337 வினா—திரு. ந. சோமசுந்தரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், அம்மாப்பேட்டை அரசினர் மருந்தகத்தை அரசினர் மருத்துவ மனையாக விரிவு படுத்துகின்ற செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இல்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தஞ்சை மாவட்டம் அம்மாப்பேட்டையில் உள்ள மருந்தகம் நீண்ட நெடுங்காலமாக எவ்வித படுக்கை வசதியும் இன்றி இருக்கிறது. ஆகவே இதை விரிவுபடுத்த இனிமேலாவது அரசாங்கம் மறுபரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மருந்தகம் என்பதற்கும் மருத்துவமனை என்பதற்கும் இடையே உள்ள வேறுபாட்டை உறுப்பினர் அவர்கள் எண்ணிப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மருந்தகம் டிஸ்பென்ஸரி மட்டும்தான். படுக்கை வசதியை விரிவுபடுத்துவது தாலுகா மருத்துவ மனைகளிலேயே

இயலாத ஒன்றாக இருந்து வருகிற நிலையில் இங்கு அப்படி படுக்கை வசதியை விரிவுபடுத்துவதோ அல்லது ஏற்படுத்துவதோ இப்போது இயலாத காரியம்.

* 338 வினா—திரு. ந. சோமசுந்தரம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், அம்மாப்பேட்டை அரசினர் மருந்தகத்தில் பெண் மருத்துவர் ஒருவரை நியமனம் செய்ய செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தஞ்சை மாவட்டம் அம்மாப்பேட்டை அரசினர் மருந்தகத்தில் கூடுதலாக ஒரு பெண் மருத்துவரை நியமிக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

ஆலைத் தொழிலாளர்களின் விடுப்புச் சம்பளம்

* 339 வினா—திரு. கே. என். குமாரசாமி: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தொழிலாளர்கள் இ.எஸ்.ஐ. லீவ் எடுத்தால் லீவுக்குண்டான சம்பளம் லோகல் ஆபீசில் பெறுவதற்குப் பதிலாக அந்தந்த மில்களிலேயே விநியோகிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தொழிலாளர்கள் இ.எஸ்.ஐ. விடுமுறை எடுத்தால் விடுமுறைக்குண்டான சம்பளம் லோகல் ஆபீசில் பெறுவதற்குப் பதிலாக அந்தந்த மில்களிலேயே விநியோகிக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. கே. என். குமாரசாமி: இந்த லீவ் சம்பளம் பெறுவதற்கு ஒரு நாள் லீவ் எடுத்துக் கொண்டு லோக்கல் ஆபீஸுக்குப் போக வேண்டியிருக்கிறது. அதை ஆலைகளிலேயே விநியோகிக்கும் ஒரு ஏற்பாட்டை அரசாங்கம் செய்யுமானால் இப்படி லீவ் எடுக்காமலேயே அங்கேயே பெறுவதற்கு வாய்ப்பு ஏற்படும். அதைச் செய்வதற்கு அரசாங்கம் ஏதாவது சிபார்சு செய்யுமா?